இவற்றை முயல்க

1. அன்றாட வாழ்வில் குத்தெதிர்க் கோணங்களுக்கான நான்கு எடுத்துக்காட்டுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.



உங்களுடைய சுற்றுப்புறத்தில் காணப்படும், குத்தெதிர்க் கோணங்களுக்கான மேலும் நான்கு எடுத்துக்காட்டுகளைக் குறிப்பிடுக.

2. கொடுக்கப்பட்டுள்ள படத்தில், $\overleftrightarrow{AB}$ மற்றும் $\overleftrightarrow{CD}$ என்ற இரு கோடுகள் O-வில் வெட்டிக்கொள்கின்றன. கோண இணைகளைக் கவனித்து அட்டவணையை நிறைவு செய்க. உங்களுக்காக ஒரு கட்டம் நிரப்பப்பட்டுள்ளது.

கோண இணைகள்	$\angle AOC$	$\angle AOD$	$\angle BOC$	$\angle BOD$
$\angle AOC$	அதே கோணம்	அடுத்துள்ள கோணம்	அடுத்துள்ள கோணம்	குத்தெதிர்க் கோணம்
$\angle AOD$				
$\angle BOC$				
$\angle BOD$				



3. இரு சோடி குத்தெதிர்க் கோணங்களின் பெயர்களை எழுதுக.



4. கீழே கொடுக்கப்பட்டுள்ள படத்தில் x° இன் மதிப்பைக் காண்க.



செயல்பாடு

ஒரு காகிதத்தில் $\overleftrightarrow{AB}$ மற்றும் $\overleftrightarrow{CD}$ என்ற வெட்டும் கோடுகளை வரைக. அவைகள் O-என்ற புள்ளியில் வெட்டிக்கொள்ளட்டும். இரு சோடி குத்தெதிர்க் கோணங்களுக்கு $\angle 1$, $\angle 2$ என்றும் $\angle 3$, $\angle 4$ என்றும் பெயரிடுக. $\angle 2$, $\angle 3$ ஆகியவற்றைப் பிரதியெடுக்க. பிரதியெடுத்த கோணம் $\angle 2$ ஐக் கோணம் $\angle 1$ இன் மீது பொருத்துக. அவை சமமாக உள்ளனவா? அதேபோல், பிரதி எடுத்த கோணம் $\angle 3$ ஐக் கோணம் $\angle 4$ இன் மீது பொருத்துக. அவை சமமாக உள்ளனவா? இதற்கான முடிவுகளைப் பதிவு செய்து கலந்துரையாடுக.

மேற்கண்ட செயல்பாட்டின் மூலம் குத்தெதிர்க் கோணங்கள் சமமானவை என்று அறிகிறோம்.

7th_Maths_T1_TM_Chp5.indd 96 20-12-2021 21:43:22